## பயத்தைப் போக்க போடப்பட்ட மேக் அப்தான் அ.தி.மு.க. பொதுக்குழு!

# எடப்பாடிக்கு 2026 தேர்தலிலும் படுதோல்வியை மக்கள் பரிசாகத் தருவார்கள்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிக்கை!

சென்னை, டிச.11–

**கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-**

நெல் கொள்முதல் ஈரப்பத அளவை உயர்த்துங்கள் என்று அதிமுக பொதுக்குழுவில் ஒன்றிய அரசுக்கு நேரடியாக ஒரு கோரிக்கை வைப்பதற்குகூட "போலி விவசாயி" எடப்பாடி பழனிசாமிக்கு துணிவில்லை.

10 தோல்வி கண்ட பழனிசாமிக்கு 2026 தேர்தலிலும் படுதோல்வியை மக்கள் பரிசாகத் தருவார்கள்.

ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு அண்ணா திமுக அமித்ஷா திமுகவாக மாறி விட்டதை மறைக்க முயற்சித்தாலும் அதிமுக பொதுக்குழு தீர்மானங்கள், பாஜகவின் அடிமை பழனிசாமி என்பதை தமிழ்நாட்டு மக்களுக்கு சொல்லும் வகையிலேயே உள்ளன.



### அதிகாரம் என்ற போலி சட்டை!

"கூட்டணிக்கு அதிமுகதான் தலைமை; கூட்டணியில் இடம்பெறும் கட்சிகள் குறித்து முடிவெடுக்க எடப்பாடி பழனிசாமிக்கு முழு அதிகாரம்" என்ற தீர்மானம் பார்ப்பதற்கு எடப்பாடி பழனிசாமியை அ.தி.மு.க.வினர் மத்தியில் "டான்" போல காட்டுமே தவிர, அவர் டம்மி என்பது மக்களுக்கும் பா.ஜ.க.வுக்கும் நன்றாகவே தெரியும்.

அ.தி.மு.க. பொதுக்குழு நடப்பதற்கு இரண்டு நாள் முன்புகூட குஜராத்தில் பேசிய அமித்ஷா, "பீகாரை தொடர்ந்து தமிழ்நாட்டிலும் பா.ஜ.க. கூட்டணி ஆட்சி அமைக்கும்" என்றார். "மாப்பிள்ளை அவர்தான், ஆனால் அவர் போட்டிருக்கும் சட்டை என்னுடையது" என்ற வசனம் போல மாப்பிள்ளை பழனிசாமிதான். ஆனால், அவருக்கு எந்த அதிகாரமும் கிடையாது என்பதுதான் அமித்ஷா சொன்ன வார்த்தையின் அர்த்தம். ஆனால், அ.தி.மு.க. பொதுக்குழுவில், "அதிகாரம்" என்ற போலி சட்டையை பழனிசாமிக்கு மாட்டியிருக்கிறார்கள்.

### அ.தி.மு.க.வினருக்கு நன்கு தெரியும்!

அமித்ஷா அழைப்பின் பேரிலே டெல்லி சென்ற எடப்பாடி பழனிசாமி கார்கள் மாறி அமித்ஷாவை சந்தித்தும், முகமூடி அணிந்து வெளிவந்ததையும் தமிழ்நாட்டு மக்கள் பார்த்தார்கள். அந்த அமித்ஷா சொல்வதை மீறி எதையுமே எடப்பாடி பழனிசாமியால் செய்ய முடியாது என்பது அ.தி.மு.க.வினருக்கே நன்கு தெரியும். எடப்பாடி பழனிசாமியின் பயத்தை போக்க போடப்பட்ட மேக்அப்தான் பொதுக்குழு.

மெகா கூட்டணி அமைப்பதாக கூறிய எடப்பாடி பழனிசாமியை நம்பி எந்தக் கட்சியும் வர தயாராக இல்லை; 10 தோல்வி கண்ட பழனிசாமிக்கு எந்த ஆளுமையும் இல்லை; மக்கள் செல்வாக்கும் கிடையாது என்பது தெள்ளத்தெளிவாக உணர்ந்த அமித்ஷா, எடப்பாடி பழனிசாமியை மிரட்டி அடிபணிய வைத்து கூட்டணியை அவரே அறிவித்தார் என்பதுதானே நிஜம்.

அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்டவர்கள் டெல்லி சென்று அமித்ஷாவை சந்தித்துவிட்டு வருகிறார்கள். அதற்காக அமித்ஷாவை கண்டித்து ஒருவார்த்தை கூட பேசாத தொடைநடுங்கி எடுபுடி பழனிசாமிக்குதான் கூட்டணியில் இடம்பெறும் கட்சிகள் குறித்து முடிவெடுக்கும் முழு அதிகாரம் என்பது மிக சிறந்த நகைச்சுவை.

### ஒன்றிய அரசை கண்டிப்பாரா?

நெல் கொள்முதல் ஈரப்பத அளவை 17 விழுக்காட்டில் இருந்து 22 சதவீதமாக அதிகரிக்க வேண்டும் என்ற தமிழ்நாட்டின் கோரிக்கையை ஒன்றிய பா.ஜ.க. நிராகரித்துவிட்ட விவகாரத்தில், ஒன்றிய அரசைக் கண்டிக்க தைரியம் இல்லாத பழனிசாமி, தி.மு.க. அரசைக் கண்டித்திருப்பது பச்சைத் துண்டு அணிந்துகொண்டு பச்சைதுரோகம் செய்யும் போலி விவசாயி பழனிசாமி என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்திருக்கிறார்.

நெல் கொள்முதல் ஈரப்பத அளவை உயர்த்துங்கள் என்று அ.தி.மு.க. பொதுக்குழுவில் ஒன்றிய அரசுக்கு நேரடியாக ஒரு கோரிக்கை வைப்பதற்குகூட "போலி விவசாயி" எடப்பாடி பழனிசாமிக்கு துணிவில்லை. உண்மையான விவசாயியாக இருந்தால் பிரதமரை டெல்லி சென்று சந்தித்து 22 சதவீதம் வரை உள்ள நெல்லையும் கொள்முதல் செய்ய அனுமதி வழங்கினால்தான் கூட்டணியில் தொடருவோம் என நிபந்தனை விதிக்க ஆளுமை வேடம்போடும் எடப்பாடி பழனிசாமிக்கு தெரியும் இருக்கிறதா?

கோவை, மதுரை நகரங்களின் மெட்ரோ திட்டங்களை ரத்து செய்த மோடி அரசை கண்டிப்பதற்கு பதில், ஒன்றிய பா.ஜ.க. அரசு கூறிய மொக்கையான காரணத்தையே அ.தி.மு.க. பொதுக்குழு தீர்மானத்திலும் நியாயப்படுத்தி கோவை, மதுரை மக்களுக்கு பெரும் துரோகத்தை செய்திருக்கிறார்கள்.

### புலம்புவதே வாடிக்கை!

திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாடு அடைந்துவரும் வளர்ச்சியை தினந்தோறும் பார்த்து வயிற்றெரிச்சலில் தவிக்கும் எடப்பாடி பழனிசாமி, போகின்ற இடங்களிலெல்லாம் புலம்புவதை வாடிக்கையாக வைத்திருந்தார். அதையே அ.தி.மு.க. பொதுக்குழுவின் தீர்மானங்களாகவும் வடித்துள்ளார். தமிழ்நாட்டின் கடன் சுமை கட்டுக்குள் இருப்பதாக சி.ஏ.ஜி. வெளியிட்ட அறிக்கையிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனாலும் கடன் சுமை அதிகரித்துவிட்டதாக அ.தி.மு.க. பொதுக்குழுவில் அவதூறு பரப்பப்பட்டுள்ளது.

2011ம் ஆண்டு தி.மு.க. ஆட்சி நிறைவு பெறும்போது தமிழ்நாட்டின் மொத்தக் கடன் 1,01,349 கோடி ரூபாய்தான். 10 ஆண்டுகால அ.தி.மு.க. ஆட்சி நிறைவடையும்போது 2021ம் ஆண்டில் தமிழ் நாட்டின் கடன் 4,80,300 கோடி ரூபாய். அதாவது 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டின் கடன் சுமார் 5 மடங்கு அதாவது கிட்டதட்ட 500 சதவீதம் அதிகரித்துள்ளது. அதே நேரம் தி.மு.க. ஆட்சியில் தற்போது 9 லட்சத்து 20 ஆயிரம் கோடி அளவிற்கு கடன் இருந்தாலும் 2021ல் தி.மு.க. ஆட்சிக்கு வந்ததிலிருந்து 93 சதவீதம் அளவிற்கே கடன் உயர்ந்துள்ளது.

ஒரு மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியான ஜி.எஸ்.டி.பி.யை ஒப்பிடும்போது கடன் அளவு எவ்வளவு என்பதுதான் கடன் சுமையை தீர்மானிக்கும் காரணி. அந்த வகையில் தமிழ்நாட்டின் DEPT TO GSDP RATIO 26.4 சதவீதம் தான். தமிழ்நாடு நிதி பொறுப்புச் சட்டம் 2003 நிர்ணயித்த கடன் வரம்பைவிட குறைவான அளவில்தான் தமிழ்நாட்டின் கடன் அளவு உள்ளது.

### பொய்யான புள்ளி விவரம்!

"முதலீடுகள் இல்லை, நிறுவனங்கள் இடம் பெயர்கின்றன, வேலை வாய்ப்பு இல்லை, ஏமாற்றும் புள்ளி விவரங்கள்" என பொத்தாம் பொதுவாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிய அ.தி.மு.க., தனது ஆட்சிக்காலத்தில் இவ்வளவு முதலீடுகள் ஈர்க்கப்பட்டன; அதிலிருந்து தி.மு.க. ஆட்சியில் இவ்வளவு கோடி குறைவாக உள்ளது. அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட 'இந்த' நிறுவனம் தற்போது வேறு மாநிலத்திற்கு சென்று விட்டது, அ.தி.மு.க. ஆட்சியில் இத்தனை இலட்சம் வேலை வாய்ப்புகளை உருவாக்கினோம்; தற்போது அதைவிட குறைந்த வேலை வாய்ப்புகளே உருவாக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டு கூறியிருந்தால் முதலீடு ஈர்ப்பு, தொழில் வளர்ச்சி விஷயத்தில் அ.தி.மு.க. ஆட்சியின் யோக்கியதை தெரிந்துவிடும் என்பதால் பொத்தாம் பொதுவான குற்றச்சாட்டை கூறியிருக்கிறது அ.தி.மு.க.

2016 முதல் 2021 வரையிலான அ.தி.மு.க. ஆட்சியில் 15,543 கோடி ரூபாய் முதலீட்டில் 10,316 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளித்திடும் 21 தொழிற்சாலைகளுக்குப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு; அவற்றுள் 12 தொழிற்சாலைகள் மட்டுமே தொடங்கப்பட்டன. ஆனால், திராவிட மாடல் ஆட்சியில் கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 9.74 லட்சம் கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டு 31 லட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த முதலீடு புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் முதல் கட்டமாக 46 தொழிற்சாலைகள் தங்களது உற்பத்தியை தொடங்கிவிட்டன. அதனால்தான் தமிழ்நாடு கடந்த 14 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 11.19% இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியை அடைந்து இந்தியாவில் முதன்மை மாநிலமாக திகழ்கிறது. இந்த வளர்ச்சியை பழனிச்சாமியால் பொறுத்துக் கொள்ள முடியாமல், ஒன்றிய பா.ஜ.க. அரசு வழங்கிய புள்ளி விவரத்தையே "பொய்யான புள்ளி விவரம்" என்று கூறியுள்ளார்.

### கலவர அரசியலுக்கு துணை போகும் பழனிசாமி!

திருப்பரங்குன்றம் கார்த்திகை தீபம் விவகாரத்தில் நீதித்துறையின் மதச்சார்பின்மைக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் அடம்பிடிக்கும் நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதனுக்கு எதிராக தி.மு.க. கொண்டு வந்த கண்டனத் தீர்மானத்தை வட மாநிலங்களைச் சேர்ந்த எம்.பிக்கள் உள்பட 120 மக்களவை எம்.பிக்கள் ஆதரித்துள்ளனர். ஆனால் மற்ற மாநிலங்களில் மதக் கலவரம் செய்தே ஆட்சியை மாற்ற பா.ஜ.க. முயற்சி செய்து பலனடைந்ததால் தமிழ்நாட்டிலும் அந்த பலனை அறுவடை செய்யலாம் என்ற நப்பாசையில் எடப்பாடி பழனிசாமி பா.ஜ.க.வின் கலவர அரசியலுக்கு துணை போகும் வகையில் அ.தி.மு.க. பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார். வழக்கம் போல் உச்சிப் பிள்ளையார் கோயில் அருகே தீபத் தூணில் தீபம் ஏற்றப்பட்டது; தீபம் ஏற்றிவிட்டதை மறைத்து, தீபமே ஏற்ற அனுமதி மறுக்கிறது தி.மு.க. அரசு என்று அவதூறு பரப்பும் மதவெறி கும்பலுக்கும் அவர்களுக்கு துணையாக இருக்கும் எடப்பாடி பழனிசாமிக்கும் மதசார்பின்மைக்கு முன்மாதிரியாக திகழும் தமிழ்நாட்டு மக்கள் 2026 தேர்தலில் பாடம் புகட்டுவார்கள்.

தி.மு.க. அளித்த 505 வாக்குறுதிகளில் 364 வாக்குறுதிகளுக்கு அரசாணை வெளியிடப்பட்டு விட்டது. 40 திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன. மொத்தமாக 404 திட்டங்கள் அரசின் செயல்பாட்டில் உள்ளன. 37 திட்டங்கள் ஒன்றிய அரசின் நிதி பங்களிப்பு இல்லாமல் நிலுவையில் உள்ளன. 64 திட்டங்கள் மட்டுமே இன்னும் அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளாத திட்டங்களாக உள்ளன.

தேர்தல் வாக்குறுதியாக சொல்லப்படாத இல்லம் தேடி கல்வி, காலை உணவு திட்டம், நான் முதல்வன், புதுமைப்பெண், தமிழ் புதல்வன், இன்னுயிர் காக்கும் 48 திட்டம் போன்ற திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி சொல்லியது மட்டுமல்ல சொல்லாததையும் செய்யும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் என தமிழ்நாட்டு மக்கள் பாராட்டுவதாலேயே எடப்பாடி பழனிசாமி பொய்யையும் அவதூறையும் பரப்பி ஆதாய அடைய முயற்சிக்கிறார்.

### எட்டப்பன் வேலை பார்க்கும் எடப்பாடி!

பா.ஜ.க.வின் மதவெறி கொள்கைக்கு எதிரியாக இருப்பது தி.மு.க. மட்டுமல்ல தமிழ்நாடே என்பதால் தமிழ்நாட்டுக்கு துரோகத்தையும் வஞ்சகத்தையுமே மட்டுமே ஒன்றிய பா.ஜ.க. அரசு துணிந்து செய்கிறது. அப்படியிருந்தும் பா.ஜ.க.வுடன் கூட்டணிவைத்து எட்டப்பன் வேலைபார்க்கும் எடப்பாடி பழனிசாயின் புலம்பலை தமிழ்நாட்டு மக்கள் நிராகரிப்பார்கள்; 10 தோல்வி கண்ட பழனிசாமிக்கு 2026 தேர்தலிலும் படுதோல்வியை பரிசாக தருவார்கள்.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி தெரிவித்துள்ளார்.



சென்னை கிழக்கு மாவட்டம் எழும்பூர் தெற்கு பகுதி,58 அ வட்டம் 79,80,81 ஆகிய பாகங்களுக்குட்பட்ட சாமிப் பிள்ளை தெருவில் நடைபெற்ற பாகக் கூட்டங்களில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே. சேகர்பாபு கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கினார்.
இந்த பாகக் கூட்டங்களில் பகுதி செயலாளர்கள் வி.சுதாகர், சொ. வேலு.எம்.சி, மற்றும் கே.எஸ். ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, தொகுதி பார்வையாளர் பி எம் யாழினி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.எம். நாதன், பொதுக்குழு உறுப்பினர அ.நிர்மலா தேவி, ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம் சி,தில்லைக்குமார்,வி.அபாய், ஆர்.பாபு,வி.விஜயகுமார் மற்றும் பாகத்திற்குட்பட்ட நிர்வாகிகள், கழக முன்னாடிகள் செயல்வீரர்கள், BLA 2,BDA BLC ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் வாழ்த்துரை! எம்.ஸ்ரீதரன் எம்.சி., தலைமை! எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., இரா.துரைராஜ் எம்.சி., முன்னிலை!

# பகுதி பிரதிநிதி கொடி சுரேஷ் இல்ல புதுமனை புகுவிழா!

### தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., மு.மகேஷ்குமார், ச.அரவிந்தரமேஷ், காரம்பாக்கம் க.கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா பங்கேற்பு!

சென்னை,டிச.11-

சென்னை தெற்கு மாவட்டம் சைதை மேற்கு பகுதி 139வது "அ" வட்ட பகுதி பிரதிநிதி கொடி சுரேஷ் இல்ல புதுமனை புகுவிழா முதல்வர் - கழக தலைவர் மு.க.ஸ்டாலின், தமிழ்நாடு துணை முதல் அமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின், ஆகியோரின் நல் வாழ்த்துக்களுடன், பொதுக் குழு உறுப்பினரும், 140வது வார்டு மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் தலைமையிலும், சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலகுழு தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, சைதை கிழக்கு பகுதி கழக செயலாளரும், பதிமூன்றாவது மண்டலகுழு தலைவருமான இரா.துரைராஜ் முன்னிலையிலும், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், களக்காடி எல்லப்பன், மின்னல் கந்தப்பன், கலைஇலக்கியப் பகுத்தறிவுப்பேரவை மாநில துணை செயலாளர் எம்.எஸ்.ஹரிபாபு, பகுதி அவைத்தலைவர் டி.என்.சிவமணி, பகுதி பொருளாளர் வி.பி.ஜானகிராமன், மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் சைதை சாதிக், 139வது அ வட்ட கழக செயலாளர் சை.மு.சேகர், 139வது வட்ட கழக செயலாளர் அட்கோ கமலநாதன், ஆகியோர் வரவேற்பில் எண்.85/37, மேற்கு ஜோன்ஸ் ரோடு, மேற்கு சைதாப்பேட்டை, 18கே பஸ் டிப்போ அருகில், புதிதாக கட்டப்பட்டுள்ள இல்லத்தின் புதுமனை புகுவிழா 14.12.2025 (ஞாயிற்றுக்கிழமை) காலை 4.30 மணி முதல் 6.00 மணிக்குள் நடைபெற உள்ளது.

இவ்விழாவிற்கு சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வாழ்த்துரை வழங்குகிறார்.

மேலும் இந்நிகழ்விற்கு தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ச.அரவிந்தரமேஷ், காரப்பாக்கம் க.கணபதி, ஏஎம்வி.பிரபாகர்ராஜா, மாவட்ட, மாநில நிர்வாகிகள் எஸ்.குணசேகரன், க.தனசேகரன், வேளச்சேரி பி.மணிமாறன், காசிமுத்துமாணிக்கம், பாலவாக்கம் த.விஸ்வநாதன், பாலவாக்கம் மு. மனோகரன், வேளச்சேரி எஸ். பாஸ்கர், வாசுகிபாண்டியன், ரத்னா லோகேஸ்வரன், பகுதி கழக செயலாளர்கள் கே.கண்ணன், மு.இராசா, வி.இ.மதியழகன், வே.ஆனந்தன், எம். விநாயகமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.ஹரிகிருஷ்ணன், உ.துரைராஜ், எஸ்.டி. தங்கராஜ்,பகுதி கழக நிர்வாகிகள், த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதாகௌதமன், இ.முருகேசன், ஆர்.ராஜ்குமார், மு.ஆரோக்கியம், ஆர்.அருணகிரி, மு.பாக்கியலட்சுமி, மாவட்ட அமைப்பாளர்கள் நா.மணிகண்டன், அஞ்சல்ராமன், கோ.பாஸ்கர், ஆர்.கிருஷ்ணகுமார், கோட்டூர் எஸ்.பிரகாஷ், ப.அருண்குமார், சி.பரிமேலழகர், கழக த.ரமேஷ், கொட்டிவாக்கம் பார்த்திபன், எம்.ஆர்.சசிகுமார்,

அடையார் பி.ஜே.பாஸ்கர், இராமாபுரம் வி.ராஜேஷ், கனிமொழி தனசேகரன், நிஷாசைய்த், வட்டகழக செயலாளர்கள், ந.தமிழரசு, எஸ்.பி. கோதண்டம், எம்.நாகா, த. மோகன்குமார் எம்.சி., நா. ராதாகிருஷ்ணன், எல்.ஆரோக்கியராஜ், கோட்டூர் க.மணி, கோட்டூர் கோ.சண்முகம், நேருநகர் எஸ்.பாட்சா, அ.வரதன், வே.முருகன், மாவட்ட பிரதிநிதிகள் கு.புகழ்வேந்தன்,ஜி.கே.ராமச்சந்திரன், வீ.மதிவாணன், பால்கார்ரவி, பொன்ஜெய்சிங், ஆர். ரவி, ஜி.பாபு, த.மணி,ஆர்.எல். காந்தன், பகுதி இளைஞர் அணி நிர்வாகிகள் ஜிம்பிரபு, ம.சுகுமார், க.தீபன், இரா. சத்யா, இரா.வெங்கடேசன், மு.அருண், அணிகளின் துணை அமைப்பாளர்கள் எம்.எஸ். மணி, ஏ.சந்தோஷ், டி.எஸ். ரவிச்சந்திரன், கு.கார்த்திகேயன், மாவுமில் ஸ்ரீதர், கேபிள் காளி, தீ.ராஜ்குமார், திடீர்நகர் தாஸ், என்.தீனதயாளன், தமீம்அன்சாரி, வெ.புருஷோத்தமன், ச.தினகர், எம்.மாறன், கே.பிரபு, பிரஸ்கார்த்திக், வெ.கிஷோர்குமார், பி.ஆர்.துரைராஜ், ஆர். எஸ்.டி.சிற்றரசு, பி.நரேஷ்குமார், எஸ்.ரவீந்திரகுமார், எம். ஜி.மதிவாணன், அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் ஆர். எஸ்.ரமேஷ், ஜி.ஜே.மோசஸ், எல்.கார்த்திக், கோயில்மணி, ஆட்டோஜான், சார்புசரவணன், இரா.பாபு, பூ.பாஸ்கர், த. ஜெயராமன், விவேக்செல்வம், 139வது அ வட்ட கழக நிர்வாகிகள் இ.வரதன், மா.ஏழுமலை, பி.எஸ்.பிரகாஷ், பூபதி வெங்கடேசன், ஜி. ஏழுமலை, வி.கோபாலகிருஷ்ணன், எஸ். முகமதுஅலி, என்.ராஜேஷ், 139வது வட்ட கழக நிர்வாகிகள் மு.கதிரவன், பெ.பரத்குமார், பி.எஸ்.முருகன், சாந்திசுந்தரம், அயாத்பாஷா, அ.சுப்பிரமணி, சி.டி. காசிநாதன், வி.சபரி, து.முரளி, எல்.சந்திரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகளைசவுண்டுசர்வீஸ் எம்.மூர்த்தி, பகுதி பிரதிநிதி கொடிசுரேஷ் ஆகியோர் வரவேற்கின்றனர்.


## பெருநகர சென்னை மாநகராட்சி

**பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற கூட்ட நிகழ்ச்சி பற்றிய அறிவிப்பு**

(தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 அத்தியாயம் - 4, பகுதி - 1 விதி எண்.156 (1)ன் கீழ்)

**2025-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு, மாநகராட்சி மன்ற கூடத்தில் மாமன்ற சாதாரண கூட்டம் நடைபெற உள்ளது. மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

செ.ம.தொ.இ / 1447 / வரைகலை / 2025

**மேயர்**

## தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம்

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு**

| ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண் | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் | பணியின் விவரம் |
|---|---|---|
| 276 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1 | 3 Ton capacity electric wire rope Hoist for auxiliary cooling water Pump side motor side in Unit |
| 281 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1 | Piston rod for Hydraulic cylinder of ECHS reclaimer as per the drawing |
| 283 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1 | 350 NB Seamless pipes of OD 355 6mm and MS coupling set |
| 286 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1 | Pump Casing Spider Bearing Bracket Assembly for Cooling Water Pump |
| 287 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1 | Pipe Intermediate Support for CWP 2C |
| 288 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1 | Various types of Load Hanger Supports for Condensate |
| 226 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-2 | Procurement of Filter Element for Plate Gap Type Filter Cartridges in Main Turbine Governing System |
| 229 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-2 | supply of spring seal assembly for guillotine gate at esp |
| SE/M/OT 15 | த.பொ / வ.செ.அ.மி.நி.நி-III | Replacement of buckled corroded Flat type top cover with new dished end type top cover |
| 15 | த.பொ / வ.செ.அ.மி.நி.நி-III | Procurement of Geared Motor for CERM and EERM of ESP |

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: **www.tntenders.gov.in/nicgep/app, www.tnpdcl.org, www.mstcecommerce.com/eprochome/tneb, www.tenders.tn.gov.in**

**செ.ம.தொ.இ/6576/ஒப்பந்தப்புள்ளி/2025**


## திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான

# ரூ.25 கோடி மதிப்பிலான சொத்துகள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்பு!

### இந்து சமய அறநிலையத்துறை துரித நடவடிக்கை!

சென்னை,டிச.11-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவுறுத்தலின்படியும், இந்து சமய அறநிலையத்துறையின் பகட்டுப்பாட்டிலுள்ளததிருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் நேற்று (10.12.2025) திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான சென்னை தங்கசாலை பகுதியிலுள்ள ரூ.25 கோடி மதிப்பிலான வணிக கட்டிடங்கள் மற்றும் குடியிருப்புகள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டுள்ளன.

அறுபடை வீடுகளில் ஒன்றான திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுடன் இணைந்த வசந்த உற்சவ கட்டளை மற்றும் அகண்ட கட்டளைக்கு சொந்தமாக சென்னை தங்கசாலை பகுதியில் 9,575 சதுர அடி பரப்பளவு கொண்ட வணிகம் மற்றும் குடியிருப்பு கட்டிடங்கள் அமைந்துள்ளன. இக்கட்டிடங்கள் அமைந்துள்ள சுப்புசெட்டித் தெருவில் ஈ.கே. பிரசாத் மற்றும் 3 நபர்கள், தியாகராய பிள்ளை தெருவில் ஏ.ஆர், ராமச்சந்திரன் மற்றும் 4 நபர்கள், தங்கச் சாலையில் திருமதி வள்ளியம்மாள் மற்றும் 8 நபர்கள் என மொத்தம் 18 நபர்கள் நீண்ட காலமாக வாடகை செலுத்தாமல் நிலுவையில் வைத்திருந்தனர். இது தொடர்பாக வேலூர் இணை ஆணையர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டதில் சட்டப்பிரிவு 78(1)-ன் கீழ் ஆக்கிரமிப்புதார்களை வெளியேற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இன்று (10.12.2025) திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் இணை ஆணையர்/ செயல் அலுவலர் திருமதி க. ரமணி, திருவள்ளூர் மண்டல இணை ஆணையர் திருமதி.தி அனிதா, சென்னை-1 உதவி ஆணையர் க. சிவகுமார், திருத்தணி திருக்கோயில் உதவி ஆணையர் திரு க. விஜயகுமார் ஆகியோர் முன்னிலையில் வருவாய்த் துறை, காவல்துறை மற்றும் மின்சார வாரிய அலுவலர்கள் துணையுடன் ஆக்கிரமிப்பிலிருந்து அகற்றப்பட்டு சொத்துகள் திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. இதன் தற்போதைய சந்தை மதிப்பு ரூ. 25 கோடியாகும்.

இந்நிகழ்வின் போது, தனி வட்டாட்சியர் (ஆலய நிலங்கள்) திருமதி. பாலாஜி, சிறப்பு பணி செயல் அலுவலர்கள் மாதவன், பிரகாஷ், , ஆய்வாளர்கள் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் உடனிருந்தனர்.

## ஆர்.கிருஷ்ணகுமார் தலைமையில்

# சைதை மேற்கு பகுதி இளைஞரணி ஆலோசனைக்கூட்டம்!

### எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., ஆலோசனைகளை வழங்கினார்!

சென்னை,டிச.11-

கழக தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றிட, கழக மாநில இளைஞர் அணி செயலாளர் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில், 14.12.2025 (ஞாயிற்றுக்கிழமை) அன்று திருவண்ணாமலையில் உள்ள கலைஞர் திடலில் திமுக இளைஞர் அணி வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்புக்கூட்டம் நடைபெறுவதை குறித்து சைதை மேற்கு பகுதியில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.கிருஷ்ணகுமார் தலைமையிலும், பொதுக்குழு உறுப்பினர் களக்காடி எல்லப்பன், பகுதி கழக நிர்வாகிகள் டி.என்.சிவமணி, த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதாகௌதமன், வி.பி.ஜானகிராமன், வட்டகழக செயலாளர்கள் சை.மு.சேகர், ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், அட்கோகமலநாதன், ஆகியோர் முன்னிலையில் 08.12.2025 திங்கட்கிழமை மாலை 6 மணியளவில் சைதாப்பேட்டை பஜார்சாலையில் உள்ள சென்னை தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலகுழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் திருவண்ணாமலை கலைஞர் திடலில் திமுக வடக்கு மண்டல இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு கூட்டத்தில் நம்முடைய பகுதியை சார்ந்த இளைஞர் அணியினர் பெருந்திரளாக பங்கேற்பது குறித்து, பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்து ஆலோசனைகளை வழங்கினார்.

பகுதி அமைப்பாளர் ஜிம் க.பிரபு, பகுதி துணை அமைப்பாளர்கள் ம.சுகுமார், க.தீபன், இரா. சத்யா, பரத்குமார், அருண் உள்ளிட்ட வட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பெருந்திரளாக பங்கேற்றனர்.



சென்னை கிழக்கு மாவட்டம் எழும்பூர் வடக்கு பகுதி,77வது அ வட்டம், 63,68,56 ஆகிய பாகங்களுக்குட்பட்ட சுந்தராபுரம் சிவராஜபுரம் சந்திப்பில் நடைபெற்ற பாகக் கூட்டங்களில் மாவட்டச் செயலாளர் பி.கே. சேகர்பாபு கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கினார். இந்த பாகக் கூட்டங்களில் பகுதி செயலாளர் சொ. வேலு.எம்.சி,கே எஸ் ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா,தொகுதி பார்வையாளர் பி எம் யாழினி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே எஸ் எம் நாதன், எம் சி,தில்லைக்குமார்,வி.அபாய், மற்றும் பாகத்திற்குட்பட்ட நிர்வாகிகள், கழக முன்னாடிகள் செயல்வீரர்கள், BLA 2,BDA BLC ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பல்லாவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்கு சாவடி செயல் திட்டத்தின் கீழ் பாகம் எண் 268 ல் பாக முகவர் செயல்வீரர்கள் கூட்டம் பாக முகவர் இரா. சேகர் தலைமையில் பாக ஒருங்கிணைப்பாளர் கோ. ஜானகிராமன் முன்னிலையில் வட்டக் கழகச் செயலாளர் டி. எஸ். பிரான்சிஸ் பால் வரவேற்பில் இ. கருணாநிதி எம்.எல்.ஏ., பகுதி கழகச் செயலாளர் இ. ஜோசப் அண்ணாதுரை ஆலோசனை வழங்கினர். அப்பொழுது அந்த பாகத்தின் BDA, BLCக்கள் பகுதி கழக வட்டக் கழக அந்த பாகத்தில் உள்ள உறுப்பினர்கள ஆகிய 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.